இணைந்த சேவை சுற்றறிக்கை இல. 05/2017

எனது இல.: PA/CS/POLICY/කා.ක.ඉම් විභාග IV
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2017.11.16 ஆந் திகதி

அமைச்சு செயலாளர்களுக்கும்
மாவட்டச் செயலாளர்களுக்கும் / அரசாங்க அதிபர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்

**<u>சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இருந்து அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைவது தொடர்பாக சலுகைக் காலம் வழங்குதல்</u>**

பரீட்சைகள் உரியவாறு நடாத்தப்படாமை காரணமாக, உரிய தினங்களில் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு இயலாமற்போன அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைவது தொடர்பாக சலுகை வழங்கப்பட்ட 2017.02.16 ஆந் திகதிய 01/2017 இலக்கமுடைய இணைந்த சேவைகள் சுற்றறிக்கை தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. அதனை முன்னுதாரணமாக கொண்டு சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இருந்து அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பிற்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கீழ்ப்பட்டு வினைத்திறன்காண் தடைப் பரீட்சை தொடர்பாக சலுகை வழங்குவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

i. முன்னைய சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பிற்கு உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடமொன்றான சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாகம் எனும் பாடத்தில் சித்தியடைவதற்காக 2006.09.11 ஆந் திகதியில் இருந்து 2009.10.14 ஆந் திகதி வரையான சலுகைக் காலம் வழங்கப்பட்டமை.

ii. முன்னைய சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய சுகாதார உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பிற்கு உரிய மற்றும் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பிற்கு உரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை பூர்த்தி செய்வது தொடர்பாக சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை 2003.05.01 ஆந் திகதி தாபிக்கப்பட்டதன் பின்னர், அச் சேவையின் II ஆம் வகுப்பிற்கு பதவியுயர்த்தும் கடிதம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து நடாத்தப்பட்ட அடுத்தடுத்த ஆறு (06) பரீட்சைத் தவணைகள் தொடர்பாக சலுகைக் காலம் வழங்கப்பட்டமை.

02. அதற்கமைய II ஆம் வகுப்பிற்கு உரியதான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துவது / சித்தியெய்துவதில் தாமதம் காரணமாக ;

i. II ஆம் தரத்திற்கு உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைய முடியாமற்போனதன் காரணமாக, சம்பள ஆண்டேற்றங்கள் பிற்போடப்பட்ட அலுவலர்களும்

ii. அதன் காரணமாக சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில் 1 ஆம் தரத்திற்கான பதவியுயர்வு உரிய காலத்தை விட தாமதமாக கிடைக்கப் பெற்ற அலுவலர்களும்

இதன் கீழ் தமது பிற்போடப்பட்ட சம்பள ஆண்டேற்றங்களையும், அதன் காரணமாக தாமதமான சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில் 1 ஆம் தரத்திற்கான பதவியுயர்வுகளை ( இல. 1372/23 மற்றும் 2004.12.24 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 12.3 மற்றும் 2013.04.02 ஆந் திகதிய அச் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள) <u>மாத்திரம்</u> இற்றைவரைப்படுத்துவது தொடர்பாக ஏற்கெனவே வினைத்திறன்காண் தடைப் பரீட்சை அல்லது பதவியுயர்வு அல்லது சலுகை கோரி மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படாத அலுவலர்களும் தத்தமது திணைக்களத் தலைவர்களின் சிபார்சுடன் கோரிக்கையொன்றை எனக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இது கடந்த காலம் குறித்து செல்வாக்குச் செலுத்துகின்ற வகையில் மேற்கொள்ளப்படும் சலுகை ஒன்றாகையால், கடந்த காலத்தில் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் குறித்து தற்போது எவ்வகையிலும் தீர்வு வழங்க முடியாதுள்ளதுடன், அவ்வாறான விடயங்களின் போது எடுக்கப்பட்ட, கடந்தகால செயற்பாடுகளுக்கு எதுவித பாதிப்புமில்லாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதனால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளை கவனத்திற் கொள்வதற்கு எதுவித அவகாசமுமில்லை என்பதை வலியுறுத்துகின்றேன்.

i. இச்சலுகை உரித்தாவதற்கு முன்னர் சம்பள ஆண்டேற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளமை காரணமாக இழக்கப்பட்ட பிற சேவைகளுக்கு பிரவேசிப்பதற்கோ பதவியுயர்வுகள் ( இல. 1372/23 மற்றும் 2004.12.24 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 12.2 பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) தொடர்பாகவோ போட்டிப் பரீட்சை / நேர்முகப் பரீட்சைக்களுக்கோ அல்லது அவ்வாறான எந்தவொரு சந்தர்ப்பத்திற்கோ தெரிவு செய்யப்படுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டமை தொடர்பாக சலுகை கோரி சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

ii. இச்சலுகை உரித்தாவதற்கு முன்னர் சம்பள ஆண்டேற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளமை காரணமாக இழக்கப்பட்ட பதவிகளை பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் தொடர்பாக சலுகை கோரி சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

iii. இச்சலுகை உரித்தாவதற்கு முன்னர் சம்பள ஆண்டேற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளமை குறித்து அறிந்து கொள்ளாது / கவனஞ் செலுத்தாது உண்மைக்குப் புறம்பான வகையில் பதவியுயர்வுகள் அல்லது வேறேதும் போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து அதில் சித்தியடைந்து, நேர்முகப் பரீட்சையின் போது அல்லது அதற்குப் பின்னரான சந்தர்ப்பம் ஒன்றின் போது சம்பள ஆண்டேற்ற பிற்போடப்பட்டமையை கண்டுகொள்ளல் அல்லது கவனஞ் செலுத்துதல் தொடர்பாக குறித்த பதவியுயர்வுகள் அல்லது பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாக கொண்டு வழங்கப்படும் நியமனம் அல்லது வரப்பிரசாதங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள அலுவலர்களினால் அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை / வரப்பிரசாதங்களை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

04. 2003.05.01 ஆந் திகதிக்கு முன்னர் சுகாதார எழுதுநர் சேவைக்கு நியமிக்கப்பட்டு அச் சேவையின் 11 'அ' வகுதிக்கு பதவியுர்த்தப்பட்டு 11 'அ' வகுதிக்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் 2003.05.01 ஆந் திகதி வரை சித்தியடையாத அலுவலர்களுக்கும் 2003.05.01 இற்குப் பின்னர் இச் சுற்றறிக்கையின் கீழ் குறித்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை பூர்த்தி செய்வதற்கு இதன்மூலம் அடுத்தடுத்த 06 பரீட்சை சந்தர்ப்பங்கள் உரித்தாவதுடன், அத்தினத்துக்கு அதாவது 2003.05.01 திகதிக்கு முன்னர் அதனைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால் சம்பளம் பிற்போடப்பட்டிருப்பின், அது அவ்வாறே நிலவுவதுடன், இதன் மூலம் அதற்கான சலுகை கிடைக்கப்பெற மாட்டாது.

05. மேலும், மேற்படி 01 ii. ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள அடுத்தடுத்த 06 பரீட்சைகளுக்கான சந்தர்ப்பங்கள் கணக்கிடப்படும் போது II ஆம் வகுப்புக்கான பதவியுயர்வுக் கடிதம் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து நடாத்தப்பட்ட முன்னைய சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பரீட்சைக்கான சந்தர்ப்பங்களும் உட்பட 2006.09.10 ஆந் திகதிக்குப் பின்னர் நடாத்தப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 11 ஆம் வகுப்பிற்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும் உட்பட இரு சேவைகளிலும் பெற்ற அடுத்தடுத்த பரீட்சைக்கான சந்தர்ப்பங்களை கணக்கிட வேண்டியுள்ளதுடன், இரு சேவைகளிலும் பெற்ற அடுத்தடுத்த பரீட்சைக்கான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை 06 ஆக இருக்க வேண்டியதுடன், அதனை விஞ்சுவதற்கு இதனூடாக சந்தர்ப்பம் கிட்டாது.

**ஒப்பம்/ கே.வீ.பீ.எம்.ஜே. கமகே**
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதி :

| | | |
|---|---|---|
| அனைத்து மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்களுக்கு | – | அறிந்துகொள்வதற்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும் |